பதிவு எண் — M.5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

வெள்ளிக் கிழமை

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 தருதலம், மாம்பாக்கம்; கா, பங்குனி; 14—3—52. தளிர்-24

குருகுலத்தின் குறிக்கோள் :

இருமை வகைதெரிந்து
ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

உலகப் புகழ்

புகழ், பல வழிகளால் மக்களுக்கு வருகின்றது; பல திறப் புகழ்களாகவும் விளங்குகின்றது. இந்நிலையில், தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத நிலைத்த புகழ் எது? அது எதனால் வருவது? என்பன அறிந்து, அப் பெருமைக்குரிய வழியைக் கடைப்பிடித்தல் நல்லது.

மிக்க செல்வம் திரட்டி ஆட்சி புரிந்து அரசியற் பெருமை பெறப் பலர் முயல்வதைக் காண்கிறோம்; அரசியல் இயக்கத்தைச் சேர்ந்து ஆட்சி நிலை எய்தி அதன் வாயிலாகப் பெருஞ் செல்வந் திரட்ட முயல்வோரும் உலகில் உள்ளனர். பெருமை இப் பொருளாட்சி வகைகளாலும் உண்டாகின்றது.

இனி, தக்க கல்வி பயின்று ஒரு கலைத் திறன் தேர்ந்து, வாழ்க்கைக்குப் பயன்தரும் வகையில் புதுமைகள் கண்டு கலையின்ப உலகில் நிலைத்துப் பெருமை எய்த முயல்வோரும் உலகிற் சிலர்!

பொருளீட்டமும் கலை நாட்டமுமாகிய இத்துறைகளிற் பெருமை பெறுவோர் முறையே செல்வரும் கலைஞருமாவர்; இவருள், முன்னவர் பெருமையினும் பின்னவர் பெருமை மேலானது; ஓங்கி உயர்வுறுவது. ஆயினும் இவ்விரு பெருமைகளும் மாறுதற்குரியன; காரணம், இவ் விருதுறையிலும் அற நடை தவறுதற்கு வாய்ப்புகள் உண்டு; நடை தவறுமபோது, இவற்றின் நிலைமைகளும் பெருமைகளும் சிதைந்து குன்றி விடுகின்றன. பிறவியும் மறுமையும் பாழாய் விடுகின்றன. இம்மை நினைவு மட்டும் உடையோர் இவ்வாறு கேடுறுகின்றனர்.

இருமை நினைவும் உடையராயிருந்தால், மக்கள், அற நடை தவறுத அறவோருமாயிருக்க முயல்வர். அற நடையை முதன்மையாய்க் கடைப்பிடிப்பர்; அந்த அற நடைக்குப் பொருட் பெருக்கையும் கலைத்தேர்வையும் பயன்படுத்துவர்; அற நடைக்கு ஒவ்வாத இடத்தில், பொருளையும் கலையையும் பொருள் செய்யாது துறப்பர்.

இதனால், அவர் பெருமை, மற்றக் கலைஞர் செல்வர் பெருமை களை விட எவ்வுலகிலும் ஓங்கி உயர்ந்து நிலைத்து விளங்குகின்றது.

இருமை வகை—இம்மை மறுமை என்னும் இரண்டின் திறத்தை, தெரிந்து—ஆராய்ந்து அறிந்து, ஈண்டு—இம்மையில், அறம் பூண்டார் பெருமை—அறவொழுக்கத்தை மேற் கொண்ட சான்றோரது பெருமையே, பிறங்கிற்று உலகு—எவ்வுலகிலும் ஓங்கி விளங்கிற்று.

இம்மை—இப் பிறவி நிலை; மறுமை—மறுநிலை; மறுநிலை என்பதில் மறு பிறவி நிலையும், நுண்ணுடல் நிலையும், வீட்டு நிலையும் அடங்கும். இவற்றின் காரணங்கள் விளைவுகள் நிலைகள் முதலியவற்றை ஆராய்ந்தறிந்தால் மட்டுமே ஒழுங்கான வாழ்க்கை நடத்துதல் கூடுதலின், 'இருமை வகை தெரிந்து' என்றார்.

மறுமைக்காக இம்மையிலேயே அறஞ்செய்தல் இன்றியமையாதது என்றற்கு 'ஈண்டு' எனப்பட்டது.

அறம்—அறவொழுக்கம்; என்றது, நன்னடை. அறம் பூண்டார்—நீத்தார். பெருமையே எனப் பிரிநிலை யேகாரம் விரித்துக்கொள்க. இது, கலைஞர், அரசர் முதலியோர் பெருமைகளைப் பிரித்து நின்றது.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்

(5-10-51 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிழமை	கர, பங்குனி	தனிச்
4	14-3-52 வெள்ளி	24

தமிழர் முயற்சி

தொழில் :

வாழ்க்கை நடப்புக்குப் பொருள் வளம் இன்றியமையாதது. அதனாலேயே 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' என்று வாழ்க்கை மறை வரையறுத்துக் கூறுகிறது. அறம் இன்பம் என்னும் மற்றைய உறுதிகளும் பொருள் இன்றேல் வாய்க்க ஏதுவில்லை. இத்தகைய பொருள் வளம் பல்வேறு தொழில் முயற்சிகளால் அமைகின்றது.

ஆகவே தனிமனிதனின் வாழ்க்கைக்கும், ஒரு நாட்டின் சிறப்புக்கும் தொழில் முதன்மையாகின்றது. உணவு உடை உறையுள் மற்று முள்ள வாழ்க்கை நுகர் பொருள்கள் எல்லாவற்றையும் பெருக்கிக் கொள்ளத் தக்க தொழில் முயற்சிகள் அவ்வந் நாட்டின் தேவைகளுக் கேற்ப வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அந்நாட்டு மக்கள் உரிமையோடு அமைதியான நல்வாழ்வை நடத்த முடியும்.

தொழில்கள் அவற்றின் இன்றியமையாமைக்கும் தரத்திற்கும் ஏற்ப முதன்மையும் சிறப்பும் பெறும்.

சாதி வேற்றுமைகள் முதன் முதலில் தொழில் முறைகளுக் கேற்பவே இந் நாட்டில் கால் கொண்டன. அது பிறப்பு முறைக்கு மாறுகிற வரையில் இந் நாட்டுக்கு அதனால் ஏற்பட்ட நன்மைகளுக்கும், மாறியபின் ஏற்பட்ட தீமைகளுக்கும் அளவேயில்லை.

உயிர் வாழ்க்கைக்குப் பேருதவி செய்யும் உணவுப் பொருள்களை விளைக்கும் உழுதொழிலே மற்றெல்லாத் தொழில்களையும் விடச் சிறந்ததும் இன்றியமையாததும் ஆகும்.

அடுத்தபடியில் சிறப்புடையது உடை நல்கும் நெசவுத் தொழில்.

இவையன்றி அவ்வந் நாட்டுப் பழக்க வழக்கங்களுக் கேற்ப இவ்விரண்டு தொழில்கட்கும் துணையாக இருந்து கருவிகளைப் படைத்துக் கொடுத்தும், குடியிருப்புக் குரிய வீடு, நுகர் பொருள்கள் முதலியவற்றை அமைத்துக் கொடுத்தும் உதவி செய்யும் தொழில்கள் பல இருக்கின்றன. அவை எல்லாம் இவ் விரண்டுக்கும் பிற்பட்ட சிறப்பையே பெறும் என்க. இக் காலத்து இம் மூன்றுந் தரத் தொழில்கள் எண்ணில்லாதனவாகப் பெருகி வருகின்றன.

இனி உழுதொழிலே முதன் முதல் அறிந்துகொண்ட காலமே மக்கள் நாகரிக வாழ்க்கையில் தழைந்த காலம் என்றும், அவர்கள் அவ் வாழ்வில் சிறப்புறத் தொடங்கிய காலம் மக்களுக்கு உடை வேண்டும் என உணர்ந்து நெசவுத் தொழிலைக் கற்றுக் கொண்ட காலம் என்றும், அவர்கள் இக்காலப் பெரு நாகரிக வாழ்விற்குக் கால் கொண்ட காலம் வாணிகத் தொழிலே மேற்கொண்டு ஒப்புரவு வாழ்க்கையைத் தொடங்கிய காலம் என்றும் ஒருவாறு வகை செய்யலாம்.

இவ்வாறு மக்களின் நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாததும், அடையாளமானதும், எற்றந் தருவதுமாகிய எல்லாத் தொழில்களையும் முறையே உழவு, தொழில், வாணிபம் என மூன்று பிரிவுக்குள் அடக்கிக் கொண்டு அவற்றின் நடைமுறை நலங்கள் கவனிக்கத் தக்கன.

—ஆடலரசு.

தருதலைக் கைத்தறிகளில்
நெய்த
மேல் துட்டைகள்
(டவல்கள்)
முறுக்கு நூலால் ஆனவை!
தரமையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"

வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!
தருதலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.

சங்ககாலச் செய்யுள்

பூங்காவி மலருழக்கிப் பொய்கை யார்ந்த (1)
புதுக்கமல மிதழ்சுவைத்துப் புறம்போ யங்கு
நீங்காத கொடிமுல்லை யீந்து வாச
நெய்தலிளம் பதங்கண்டு மீண்டு லாவிப்
பாங்கோடிப் பயிலிளம்பூந் தென்ற லுள்ளப்
பனிப்பதுதீர்த் தினிப்பருளுஞ் செயற்கு மேலாய்
நாங்காணு மின்பனைத்து நாட்டிற் சங்க
நறுந்தமிழி லொருசெய்யுள் நவிற லம்மா!

வெண்ணிலவின் பயன்றுய்க்கு மாடத் துப்பர் (2)
விழுமணிப்பூங் கட்டிலமர்ந் திளம்பூந் தென்றல்
நண்ணியடி வருடவிள நகைப்பூங் கொம்பர்
நங்கையர்த முகமதியம் வெயர்வு சிந்தப்
பண்ணமிழ்தப் பாடல்வளந் தேங்க யாழின்
பயிர்காம்பி னிடைக்கொத்துப் பயிலு மாடல்
உண்ணெகிழக் காண்பதினு முற்ற வின்ப
மொருசங்கச் செய்யுள்வள மூணர லென்பார்

மாம்பழமும் தீம்பலவும் வாழை யென்னும் (3)
வளக்கனியுங் கலந்தமிழ்த மிடைவி ராவிப்
பூம்பழனக் கன்னற்றேன் புகட்டிப் பாங்கிற்
புத்தூருக்கு நெய்பெய்து போற்றிச் செய்த
ஆம்பரிசிற் சுவையுணவை யமர்ந்த காதல்
அருந்துணவி யருகிருந்து நல்க வுண்ணு
மேம்படுமந் நிலைதனக்கு மேலாஞ் சங்க
மெய்த்தமிழில் ஒருசெய்யுள் விரும்பி யோர்தல்.

இன்னறுநீர் அருகிருப்ப வியன்ற பாலை (4)
எய்துநெடும் பேய்த்தேருக் கிரங்கு வார்போல்
மன்னுபழந் தமிழ்ப்பெருமை விளக்கி மாந்தர்
மண்ணுலகில் வாழ்ந்தநலம் பொதுளக் காட்டித்
தன்னிகரில் பாடல்வளந் தழைத்த சங்கத்
தனிநூல்கள் பலவிருப்ப வந்தோ விந்நாள்
என்னினைந்தோ பிற்காலத் தெழுந்த நூல்கள்
இனிதுணர்ந்து கற்கின்றீர் என்செய் வாரே.

பொய்கலவாப் புத்தமிழ்தப் பொருளார் சங்கப் (5)
புகழ்நூல்க ளெனுஞ்சோலை புகுவோம் பண்டைச்
செய்தவத்தெ முன்னோர்தஞ் சீர்த்தி யோர்ந்து
சிந்தைமகிழ்ந் தொருமையினிற் சேர்ந்து வாழ்வோம்
கைதவத்தார் ஆக்கியவீண் கதைகள் கற்றுக்
கலாம்வினைத்துச் சாகிமதங் கற்பித் தென்றும்
பொய்தருக்குப் பேசியொழி புல்லர் நாட்டில்
புறங்காட்டிப் போயொளிக்கப் போக்கு வோமே.

சி. து. க.

குருகுல் - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணு 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணு 4.

3. தணிகைமலை அல்லது அமைதி
விலை அணு 6.

4. நல் வாழ்க்கை
விலை அணு 1.

5. திருக்குழுக்குன்றப் பதிக விளக்கம்
விலை அணு 1.

6. கருக் கலை
விலை அணு 4.

7. மூன்று உண்மைகள்
விலை அணு 3.

8. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணு 9.

9. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணு 8.

10. திருமுருகாற்றுப்படை அகராதி
விலை அணு 8.

11. தொல்காப்பியம் அகத் திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.

12. ஆத்திசூடி - கருத்துரை
விலை 0-0-3.
ஷை நூறு அமைந்த கட்டு 1-2-0.

கிடைக்கும் இடம்:

குருதலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம், P.O., (S. I. R.)

சிலப்பதிகாரம்

21. குரவைக் கூத்து

'முத்துசாமி'

கோவலன் அங்கே கொலையுண்டு கிடக்க இங்கே கண்ணகி தங்கியிருந்த ஆயர் சேரியில் பலவகை உற்பாதங்கள் நிகழ்ந்தன. குடத்திட்ட பால் உறையவில்லை. பசுக்கள் கண்ணீர் உகுத்து நின்றன. உறிக் கண் வெண்ணெய் உருகவில்லை. ஆட்டு மறிகள் துள்ளி விளையாடாது சோர்ந்து கிடந்தன. பசுக்களின் கழுத்திற் கட்டியிருந்த மணிகள் அற்று வீழ்ந்தன.

அவ்வித நிழ்ச்சிகளைக் கண்ட மாதரி வருவதோர் துன்பமுண்டென்று எண்ணித் தன்மகள் ஐயையை நோக்கி இதற்குப் 'பரிகாரமாக' யாம் முன்பு ஆயர் பாடியில் கண்ணனும் பலராமனும் பின்னையுடனுடிய குரவைக் கூத்தினை ஆடுவோம் என்று கூறினள்

ஏழு கன்னியரை நிறுத்தி அவர்கட்குக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று ஏழிசைகளின் பெயர்களை இட்டனள். அவர்களில் குரல், இளி, துத்தம் என்ற மூவரையும் முறையே கண்ணன், பலராமன், பின்னை என்றும் ஏனையோரை மற்றை நால்வர் என்றும் படைத்துக் கோட் பெயரிட்டனள். (படைத்துக் கோட் பெயரிடுவதாவது ஒரு பொருளுக்கு ஒரு பெயர் இருப்பவும் யாதானும் காரணம்பற்றி வேறொரு பெயரிட்டு வழங்குதல்) பின்னர் யாவரும் கற்கடகக் கைகோத்துத் திருமாலைப் புகழ்ந்து பாடிக் கூத்தாடினர். இது அவர்கள் ஆடிய குரவைக் கூத்து.

கூத்தாடுகையில் மாயோனைப் புகழ்ந்து பாடிய பாடல்களிற் சில:

"பொன்னிமயக் கோட்டுப்
புலிபொறித்து மண்ணுண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார்
வாழ் வேந்தன்
மன்னன் வளவன் மதிற் புகார்
வாழ் வேந்தன்
பொன்னந் திகிரிப்
பொருபடையான் என்பரால்."

பொன் போலும் இமயமலையுச்சியில் புலிச்சின்னத்தைப் பொறித்து அதற்கு இப்பாலுள்ள நிலமெல்லாம் ஆண்டவன் மதில் சூழ்ந்த புகார் நகரத்து வாழ்ந்த வேந்தன். அவன் யாவனோ என்னின் அழகிய சக்கரப் படையுடைய திருமால் என்பர்.

அரசரைத் திருமாலாகச் சொல்லுதல் மரபு. "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்னும் திருவாய் மொழியாலும் இதனை யறிக.

"வடவரையை மத்தாக்கி
வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொரு நாள்
கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார்
கடைகயிற்றூற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய்
மாயமோ மருட்கைத்தே,"

வடவரையை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும் கொண்டு கண்ணனே! நீ பண்டொரு நாள் பாற்கடலின் நடுவிடத்தைக் கலக்கினாய். அவ்விதம் கலக்கிய நின்கை யசோதைப் பிராட்டியின் கடைகயிற்றால் கட்டுண்ட கை. மலர் போலும் உந்தியினையுடையாய் மாயமோ? மிகவும் மருட்கையை உடையதாயிருக்கின்றது.

"பெரியவனே மாயவனைப்
பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை
விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும்
திருவாயும் செய்ய
கரியவனைக் காணுதற
கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம்
கண்ணென்ன கண்ணே!

தேவர்கட் கெல்லாம் பெரியவனே, மாயங்களில் வல்லவனே, பெரிய உலகங்களையெல்லாம் உந்தியாகவுடைய வானவனே, கண்ணும் திருவடியும் கையும் திருவாயும் சிவந்தும் மற்றைப் பாகங்கள் கருமையாகவும் தோன்றுபவனைக் காணுதற கண்கள் என்ன பயனைப் பெற்ற கண்களாம்? கண்ணிமைத்துப் பிற பொருள்களைக் காண்பார்தம் கண்கள் என்ன பயனைப் பெற்ற கண்களாம்?

இப்படிப் பலவாறாக மாயவனைப் புகழ்ந்து பாடிக் குரவைக் கூத்தாடினர். இடையர் என்போர் முல்லைநிலத்துக் குரியவர்; அந்நிலத்துக் குரிய தெய்வம் திருமால்; ஆகவே அவர்கள் திருமாலைப் பாடியாடினர்.

இறுதியில் அரசனை வாழ்த்திக் கூத்தை முடித்தனர்.

---

* இலக்கியம் *

மக்களின் வாழ்க்கைநிலை நடை உடை நாகரிகப் பண்புகள் அனைத்தும் ஒரு காலத்தில் இருப்பது போல் மற்றொரு காலத்தில் இருப்பதில்லை. நாளுக்கு நாள் மாறுபட்டு வருகின்றன. சென்ற கால நிலைமையை நிகழ்காலத்தில் தெளிவாக எடுத்துக் காட்டுதற்கு இலக்கியங்களே துணை புரிகின்றன. இலக்கியங்கள் இல்லையேல் பண்டைத் தமிழர் காலத்தில் நாட்டு நிலை எவ்வாறிருந்தென்றும், மக்கள் எத்தகைய பழக்க வழக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்தனர் என்றும் நாம் எவ்வாறு உணர முடியும்?

உண்மையான இலக்கியமாயின், அவ்வக் கால நாட்டியலபு மக்களியல்பை உள்ளவாறு எடுத்துக் காட்டுவதாக இருத்தல் வேண்டும். அப்படியிருந்தால் மட்டுமே அக்கால மக்கள் தம்மிடையிற் காணும் குற்றங் குறைகளைப் போக்கிக் கொண்டு பின்னும் செம்மையான வாழ்க்கையை மேற்கொள்வதற்குப், பிற்காலத்தில் அவ் விலக்கியத்தைப் பயிலும் மக்கள் தம் முன்னோர் வாழ்வில் கண்ட குறைபாடுகள் உணர்ந்து நீங்கி நல்லனவற்றை நுனித்தறிந்து பின்பற்றுதற்கும் வாயிலாகும். ஆகவே, இலக்கியங்கள் நிகழ் காலம் எதிர்காலம் ஆகிய இரண்டுக்கும் பெரும்பயன் விளைப்பதாகும்.

நாட்டில் நிகழும் உண்மை நிகழ்ச்சிகளையே அடிப்படையாக வைத்துச் செய்யப்படும் இலக்கியம் எக்காலத்தும் எல்லோருக்கும் பயன்படுவதாக நிலைத்து நிற்கும். உண்மை நிகழ்ச்சிகளை விளக்கும் நிலையில், அக் காலத்தில் வாழ்ந்த மக்களியல்பு முதலியவற்றைத் தெளியச் செய்ய வேண்டிய கட்டாயம் இலக்கிய ஆசிரியர்க்கு ஏற்பட்டு விடுகிறது. அந் நிலையில் நம்பத் தகாதனவும் நாட்டியல்பு மக்கள் வாழ்க்கை நிலைகட்குப் பொருந்தாதனவுமான செயல்களைக் கொணர்ந்து நிரப்ப அவர்கள் உள்ளம் ஒருப்படாது.

பழங்கால இலக்கியங்களில் நாம் காணும் நிகழ்ச்சிகளிற் சில நம் உள்ளத்துக்குப் பொருந்தாமலும் பகுத்தறிவுக்கு ஏலாமலும் காணப்படுவதும் உண்டு. அவை பொருத்தமில்லா நிகழ்ச்சிகள் என்று உடனே வெறுத்தொதுக்குவதிற் பயனில்லை. அந்நிகழ்ச்சிகளின் வழியாகச் சென்று அவ்விலக்கியம் நிகழ்ந்த நாட்களின் நிலையை உணர வேண்டும். அக் காலங்களில், அந் நிகழ்ச்சிகளையே பலர் சிறந்தவை என்று கருதி யிருப்பர். சிலர் வெறுத்தும் இருப்பர், ஆகவே பொறுமையோடு அந் நாட்களோடு நிகழ் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து பல வகைகளில் திருத்த முற மக்களுக்கு வழி வழி உதவிய இலக்கியங்களின் பெருமையை நினைந்து மகிழ வேண்டும்.

இலக்கியங்களின் துணை கொண்டு சமயக் கோட்பாடுகளைச் சிறிது காண்போம். சிலப்பதிகார காலத்தினை விடப் பெரிய புராண காலத்தில் பெரிதும் சமய நிலைகளில் மாறுபாடு காணப்படுகிறது. சிலப்பதிகார காலத்திலேயே சைவ வைணவ சமண பவுத்த நெறிகள் நாட்டில் விளங்கியிருந்தன என்றாலும், அவைகளுக்குள் குழப்பங்களும் பெரும் பூசல்களும் தொல்லைகளும் உண்டாகவில்லை. சமயங்கள் யாவும் ஒரு முழு முதலையே குறிப்பன என்ற குறிக்கோளில் யாவரும் இனிய நட்பு முறையில் ஒழுகினர் என்று தெரிகிறது. ஆனால் பிற்போந்த பெரிய புராண காலத்தில் சமயப் போராட்டங்கள் உச்ச நிலையை அடைந்தன. ஒவ்வொரு மதத்தவரும் தத்தம் நாட்டு வேந்தரின் துணை கொண்டு நாட்டில் குழப்பத்தைப் பெருக்கினர். சமயத்தின் பேரால் மக்கள், கூட்டம் கூட்டமாகத் துன்புறுத்தப் பெற்றனர். பலர் கொல்லவும் பெற்றனர். ஏழாம் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டு வரை அடுத்தடுத்துச் சமயப் போராட்டங்களே தமிழ் நாட்டில் தலைவிரித்தாடின என்பதற்கு இலக்கியங்களே சான்று கூறுகின்றன.

பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் மேலைட்டிலும் இதே நிலைதான் என்று மேலைட்டிலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. மேரி அரசி காலம் முதல் ஆன் அரசி காலம் ஈறாக இடைப்பட்ட டியூடர் ஸ்டுவர்ட்டு வேந்தர் காலங்களில் எத்தனையோ ஆயிரவர் மதங்களின் பேரால்

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

கம்பங்களிற் பிணைத்துக் கொளுத்தப் பெற்றதும், முதல் சார்லஸ் மக்களால் கொலை செய்யப் பெற்றதும், இரண்டாவது ஜேம்ஸ் நாடு கடத்தப் பெற்று வேற்றரசர் தயவில் உயிர் வாழ்ந்ததும் அக்கால நிகழ்ச்சிகளாகும். அக்கால மதப்போராட்டத்தின் வெறியாடலே இச் செயல்களுக்குக் காரணம் என்றும் அவ் விலக்கியங்களால் தெரிகிறது.

தமிழ் நாட்டில் நாட்டுப் பண்பினை விளக்கும் இலக்கியங்கள் சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரமும் பிற்கால நூல்களிற் பெரிய புராணமும் ஆகும். பெரியபுராணம் தனிச்சமயச் சார்புடையதாக இருப்பினும் அந் நாள் வாழ்ந்த மக்கள் உள்ளப் போக்கினை நமக்குப் பெரிதும் புலப்படுத்துகின்றது. மற்ற நூல்கள் பொழுது போக்குக்கும் மொழிப்பயிற்சிக்கும் சமய வளர்ச்சிக்கு மட்டுமே உதவுகின்றன. சிந்தாமணி கம்பராமாயணம் போன்ற நூல்கள் கவிச்சுவை, சொல்லழகு பொருளழகுகளோடு சிறந்து நிற்பனவேனும் வேற்று நாட்டு நிகழ்ச்சிகளை விளக்கும் அவைகளில் மக்கள் உணர்ந்து திருந்தவேண்டிய அளவில் பெரும்பயன் காணுமாறில்லை.

பொதுவாக இலக்கியங்கள், நாட்டில் காணும் குறைகளைப் போக்கவும், பிற்கால மக்கள் தாம் சென்ற நல்ல நெறியறிந்து நடந்து பயனடைவதற்காகவுமே தோன்றுதல் வேண்டும். அவை மக்கள் உள்ளக்கிழியில், தீட்டிய ஓவியம் போன்று நிலைத்து வாழ்வதோடல்லாமல் அவர்கள் குற்றங்களைத் திருத்திக் கொள்ள உதவவேண்டும். பொதுமக்கள் வாழ்க்கை நிலையைத் திருத்த இயலாத நூல்களை இலக்கியம் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், அவை உண்மையான நோக்கம் (இலக்கு-நோக்கம்) எதுமில்லாமல் வீணே கழிகின்றன. மருத்துவர் கைப்புள்ள மருந்துகளை இனிய தேனில் குழைத்து நோயாளிகள் அருந்தச் செய்து நோயைப் போக்குவர். அங்ஙனமே இலக்கிய ஆசிரியர்கள் இனிய நூல்கள் வாயிலாகவே நாட்டின் குறைகளை மெல்ல மெல்ல இயம்பித் தாம் வாழுங் காலத்திலேயே மக்களைத் திருத்தி நல்வழியிற் புகுத்தவேண்டும். சார்லஸ் டிக்கன்ஸ், அடிசன் போன்ற மேனாட்டு நல்லறிஞர் தம் இனிய உரைநடை இலக்கியங்களால் நாட்டில் மலிந்துகிடந்த பெருங் குறைகளைப் போக்கி உதவினர். அவர்கள் எழுத்துக்கள், அக்கால மக்களில் பலர் சென்ற நெறி திறம்பிய வாழ்க்கையைத் திருத்தியதோடல்லாமல் இன்றும் பலர் வாழ்க்கைக்கு வழி காட்டி வருகின்றன.

முன் குறித்த பழங்கால நூல்களைத் தவிர நம் நாட்டில் மக்கள் வாழ்க்கைக்கு உதவக் கூடிய வேறு இலக்கியங்கள் பெரும்பாலும் இல்லை. குற்றங் கடிந்து குணம் பயிற்ற வல்ல புதிய இலக்கியங்கள் பல இன்னும் தோன்றுதல் நலம். அவை செய்யுள் வடிவாக இருத்தல் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உரைநடையிலும் இருக்கலாம். நாட்டியல்பை எடுத்தியம்பிக் குற்றங் குறைகளைப் புலப்படுத்திச் சமூகத்தைத் திருத்த வல்ல புதிய இலக்கியங்கள் தற்காலம் மிகமிகத் தேவை. படிப்படியாகப் பலவழிகளிலும் பிற்போக்கு நிலையில் நாட்களைப் போக்கும் மக்கள் இயல்பை இவ்வாறு இலக்கியத் தோற்றங்கள் வாயிலாக மாற்ற முயலாமல் வறிதே சமய சாத்திரங்களின் உயர்வு தாழ்வுகளைப் பேசியும் எழுதியும் காலங் கழித்தல் ஏற்புடைத்தன்று.

கி. து. க.

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்வர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1.

* தேவையும் மதிப்பும் *

'கலங்கிள்ளி'

"There is many a brave heart here mother,
Dying of want and cold;
While only across the channel, mother
Are men that roll in Gold;
There are rich and proud men there, mother
With wondrous wealth to view,
And the bread they fling to their dogs to night
Would give life to me and you"

Miss Edwards.

இங்கிலாந்தின் இரும்புப் பிடியில் சிக்கிச் சீரழிந்துகொண்டிருந்த அயர்லாந்தின் அக்காலத்திய நிலை, மேல் குறிப்பிட்ட பாடல். "ஈங்கு வீர நெஞ்சினர் அநேகர் உளர். அவர்களோ தேவையாலும் குளிராலும் சாகின்றனர். அதே நேரத்தில் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து பார்த்தாலோ அவண் செல்வத்தில் புரளும் மனிதர்களை பெருமையோடு, பிரமிக்கத்தக்க பொன் பூஷணத்தோடு வாழ்கின்றனர். இன்றிரவு தங்கள் நாய்களுக்கு அவர்கள் வீசும் ரொட்டித் துண்டுகள், அம்மா! உனக்கும் எனக்கும் சாலும். நம் உயிர் நீங்காமல் அவை பாதுகாக்கும்" என்று கூறுகிறது ஒரு குழந்தை தன் தாயிடம்.

முதலாளித்துவ முறைப்படி அமையப் பெற்ற எந்த ஒரு சமுதாயத்திலும் பொருள் ஒரு சார் சென்று குவியும். அப்படி குவிந்த, குவிகின்ற, பொருள் தனிப்பட்டவர்களின் தனி உடைமை; ஆகையின் தனிச் சொத்துரிமை ஆகிறது. அவன் வீட்டிலே பிறந்த ஒரு காரணத்தாலேயே அவன் மகன் செல்வந்தனாக முடிகிறது, பிற்காலத்தில் அவனுக்கு யாதொரு முயற்சியும் உழைப்பும் தேவை இல்லை. 'இது அக்கிரமம்; சமுதாய முறைக்கு ஒத்ததன்று; இதனால் நலன் விளையாது; கலாம்தான் விளையும்' என்று கண்ட நம் திருவள்ளுவர்,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.—(குறள், 322).

என்று கூறியுள்ளார். தன்னிடம் வந்தெய்தும் பெருளை, பண்டத்தைப் பகுத்து உண்டு, பல உயிர்களையும் காப்பாற்றுதல் தான் எல்லா நூல்களையும் யாத்த பேரறிஞர்களின் கருத்துக்களில் தலை சிறந்த கருத்தாகும் என்பது இது.

இனி பொருள் ஏன் ஒரு சார் சென்று சேர்கிறது? எப்படி சிலர் செல்வந்தர்களாக ஆக முடிகிறது? விடை காண்பாம்.

செல்வம் ஒருசார் சென்று குவிதற்கு உரிய காரணங்களை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் முதலில் அதன் அடிப்படை அம்சங்களான பண்டங்கள்; அவைகளின் மதிப்பு இவைகளை விளக்கிக் கொள்வதோடு செல்வத்தின் மூலதனம் (அடிப்படை; அஸ்திவாரம்) யாது, என்பதையும் நன்கு ஆய்தல் வேண்டும்.

சென்ற கட்டுரையின் கடைசியில், நாம் பொருள் என்பது மனிதன் தேவைகளை நிரப்பும் கருவி என்று குறிப்பிட்டிருந்தோம். அவை உணவு உடை உறையுள் மட்டுமல்ல, அவன் உள்ளப்பசி அறிவுப் பசிக்கான இன்றியமையாதனவும் ஆம்.

இன்றியமையாத் தேவைகளில் முதன்மையானவை காற்றும் நீரும். காற்றுக்காக நாம் பணங்கொடுக்கின்றோமில்லை. நீருக்காகவும் அவ்வண்ணமே. காவிரியாற்றின் கரையில் உள்ளவர்கள் தண்ணீருக்காகக் கவலை கொள்வதும் கிடையாது. சேமித்து வைப்பதும் இல்லை. தேவையான போழ்து தேவையான அளவு உபயோகிக்கலாம். இது எதைக் குறிக்கிறது எனில், உபயோகிக்கும் பண்டம் அமிதமாக இருப்பின், அது எக்காலத்தும் யாவருக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருப்பின், அதைக் குறித்துக் கவலை கொள்வதோ சேமித்து வைப்பதோ மனித சமுதாயத்தின் பழக்கமன்று. வறண்ட ஊர்களுக்கு இக் காவிரி நீரே குழாய் மூலமாகக் கொண்டு செல்லப்பட்டால் அந்த நீருக்காக வரி வசூல் செய்யப்படுகிறது. மக்களும் அதைக் குடம்குடமாக நிறைத்து வைத்துக் கொள்ள முந்துறுகின்றனர்.

காற்று யாண்டும் நிறைந்துள்ளது. அதே நேரத்தில் யாதொரு மதிப்பும் அதற்குக் கிடையாது. மக்களின் தேவைக்கு இன்றியமையாததாக—உபயோக மதிப்புடையதாக - இருந்தும் யாதொரு பொருள் மதிப்பும் அற்றது. காற்றுக்காக மக்கள் சவலைப்படுவதோ பேரிடுவதோ சேமித்துவைப்பதோ இல்லை. ஏன்? காற்று ஏராளமாக இருப்பது மட்டும் காரணமன்று.

சமமாகவும் பங்கிடப்பட்டுள்ளது.

எனவே எந்த ஒரு பொருளும் உற்பத்திப் பெருக்கம் மட்டும் அமைந்திருத்தல் அமையாது. சமுதாயத்தில் அது சமமாகப் பங்கிடப்பட்டிருத்தல் வேண்டும். காற்று நிறைந்துள்ளது. மக்கள் இனத்திற்குச் சமமாகப் பங்கிடப்பட்டுள்ளது. அது உபயோக மதிப்புடையதாக இருந்தாலும் தனக்கென ஒரு மதிப்பும் உடையதாக இல்லை.

மற்றுத் தண்ணீரோ காற்றைப்போல் உபயோக மதிப்புடையது. ஆனால் நிறைந்துள்ள இடங்களில் தனக்கென ஒரு மதிப்பும் உடையதன்று. ஆங்கிருந்து வேற்றிடங்களுக்கு மக்களால் சுமக்கப்படிலே தனக்கென ஒரு மதிப்புடையதாகிறது. மக்களின் உழைப்பு அதனுள் பொதிந்திருப்பதே இதற்குக் காரணம்.

ஆற்றங்கரையிலே மணல் ஏராளமாகக் குவிந்துகிடக்கிறது. மக்கள் ஆங்குச் சென்று பொழுது கழிக்கின்றனர். வரும்போது தங்களுக்குத் தேவையானால் தங்கள் சட்டைப் பையில் அதை நிரப்பிக் கொண்டு வரலாம். மணல் யாதொரு மதிப்பும் உடையதன்று அந்த இடத்தில். ஆனால் அதே மணலை ஒரு வண்டியில் ஏற்றி வீட்டுகுக் கொண்டு வந்தால் அந்த மணல் மதிப்புடைய பொருள் ஆகிறது. வண்டிக்குக் கொடுக்கும் பணம் மதிப்பற்ற மணலுக்கு மதிப்பை உண்டாக்குகின்றது.

முன்னர்க் கூறிய சட்டைப் பையில் நிரப்பிக் கொணர்ந்த மணலும் உழைப்பைத் தன்னுள் பொதிந்துள்ளதாயினும், ஒரு தனிப்பட்ட மனிதன் தன் தேவையைப் பூர்த்தி செய்யச் செய்யும் பணி அதுவாகையின் அது ஒரு பண்டத்தின்பாற் படாது. மணலும் மதிப்புடைத்தாகாது. இந்த உழைப்பில் பலன் இருப்பினும் பண்டம் உற்பத்தியாவதில்லை. பின்னர்க் கூறியதோ ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் செல்லத் தக்கதான,–சமுதாயத் தொடர்புடைத்தான – உழைப்பைத் தான் பெற்றுள்ளதால் பண்டம் என்னும் பெயர் பெறுவதோடு மதிப்பையும் பெறுகிறது.

கடலின் அடித்தளத்திலே உள்ள முத்து மதிப்பற்றது. மூழ்கி எடுத்த பிறகு மதிப்படைகிறது.

சிற்றாரும், வரப்பெடுத்த
வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும்,
வகைப்படுத்தி
நெற்சேர, உழுதுழுது
பயன் விளைத்த
நிறை யுழைப்புத் தோள்க
ளெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து, மலை பிளந்து,
கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த
கைதான் யார்கை?
பொற்குகளை, கடல்முத்தை,
மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச்
செவரின் மூச்சு?

[பாரதிதாசன்].

மனித சமுதாயத்திற்கு எட்டாத் தூரத்தில் இருந்த பல பொருள்களை நடமாட விட்டவை, மேற் குறிப்பிட்ட தோள்கள், கைகள், மூச்சு ஆகியவை. ஆம்தானது, உழைப்பு.

எனவே பண்டம் என்பது உபயோக மதிப்புடையதாயும் உழைப்பைத் தன்னுட் கொண்டதாயும் உள்ள பொருள். அத்தகைய பண்டம் ஒருவன் தேவைக்கு எவ்வளவு இன்றியமையாததோ அந்த இன்றியமையாமையின் அளவே அதன் உபயோக மதிப்பாகும்.

மனிதனுக்குத் தேவைப்படும் எல்லாப் பொருள்களும் ஒருவனிடமே அமைவதில்லை. ஆகவே ஒரு பண்டத்தை மற்றொரு பண்டத்துக்காக அவன் மாற்றிக் கொள்ள வேண்டி இருக்கிறது. இப்படி மாற்றிக் கொள்ளுங் காலத்தில், மாற்றப்படும் இரு பண்டங்களின் உபயோக மதிப்புக்கு இடைப்படும் விகிதத்தையே மாற்று மதிப்பு என்று அழைக்கிறோம்.

சென்ற கட்டுரையில் குறிப்பிட்டபடி நெல்லைப் போட்டு வேட்டி வாங்கும் காலத்தில் இரு சாரரும் எதைக் கவனித்தனர்? இரண்டுக்கும் உள்ள உபயோக மதிப்பு இரண்டு உபயோக மதிப்புக்கும் இடைப்படும் மாற்று மதிப்பு இவைகளையே கவனித்தனர்.

மாற்று மதிப்பு என்பது என்ன? உபயோக மதிப்புக்கும் மாற்று மதிப்புக்கும் உள்ள தொடர்பு யாது? என்பவைகளை அடுத்து ஆராய்வோம்.

பதிக்தி அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருதல அச்சகம், மாம்பாக்கம்; மதராந்தகம். (அஞ்).